**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**
**O.S. No.115/2009**

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 26 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ன்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 26.03.2026</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜேந்திரன் (D.W.2) | வயது | : | 62/2026 |
| க/த பெயர் | : | திரு. சுப்ரமணியன் | தொழில் | : | டைலர் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>முதல் விசாரணை ;–</u>**

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் இன்று நான் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். 1ம் பிரதிவாதி சேட்டுவை கடந்த 40 வருடங்களாக எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதியின் அம்மாவை எனக்கு தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதியின் அம்மா செங்கம்மாளை எனக்கு 40 வருடங்களாக தெரியும். செங்கம்மாளின் சொத்து சம்மந்தமான ஏதாவது ஆவணங்களின் சாட்சி கையொப்பம் ஏதேனும் இட்டேனா என்றால் உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன்.

தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பி.சா.ஆ–3 ஆவணத்தில் உள்ள 2வது சாட்சியின் கையெழுத்து என்னுடையதுதான். பி.சா.ஆ.3 ஆவணம் யார் யாருக்கு எழுதி வைத்தது என்றால் செங்கம்மாள் சேட்டுக்கு எழுதி வைத்தார். செங்கம்மாள் கையெழுத்திட்டாரா அல்லது கைரேகை வைத்தாரா என்றால் கைரேகை வைத்தார், பி.சா.ஆ–3 ஆவணத்தில் உள்ள கைரேகை செங்கம்மாளுடையது, என் முன்னால் கைரேகை வைத்தார். பி.சா.ஆ–3 ஆவணத்தில் யார் எழுதியது என்றால் கோவிந்தராஜ் என்ற ஆவண எழுத்தர் தட்டச்சு செய்து கொண்டு வந்து உயில் ஆவணம் எழுதப்பட்டது. பி.சா.ஆ–3 ஆவணத்தில் உள்ள விபரங்களை யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் செங்கம்மாள் சொல்ல கோவிந்தராஜ் எழுதினார்.

பி.சா.ஆ–3 ஆவணத்தில் 1வது சாட்சியாக யார் கையெழுத்திட்டார் என்றால் சிராஜுதீன் கையெழுத்திட்டார், என் முன்னிலையில் கையெழுத்திட்டதை நான் பார்த்தேன். தற்போது அவர் உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார்.

பி.சா.ஆ.3 ஆவணத்தில் 2வது சாட்சியாக நானும், பின்னர் ஆவணம் எழுதிய கோவிந்தராஜ் கையெழுத்திட்டார். பி.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட யார் அழைத்தது என்றால் செங்கம்மாள் அழைத்ததன்பேரில் நான் கையெழுத்திட்டேன். பி.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள அனைத்து விபரங்களும் எனக்கு தெரியுமா என்றால் நன்றாக தெரியும்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை ;–**

**(வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் காலஅவகாசம் வேண்டுமென கேட்டுக் கொண்டதன் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.25 17:16:07 +0530

District Munsif
Mannargudi.